### ஒடிசா – பாலசோர் ரயில் விபத்து!

# உண்மைக் காரணத்தை மறைக்க முயலும் ஒன்றிய அரசு!

## மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு!



கொல்கத்தா, ஜூன் 10- ஒடிசா ரயில் விபத்துக்கான உண்மைக் காரணம் வெளியே வரவிடாமல் ஒன்றிய அரசு தடுக்கிறது என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா குற்றம் சாட்டியுள்ளார்.

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் நடந்த ரயில் விபத்தில் உயிரிழந்த, காயமடைந்த மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பயணிகளின் உறவினர்களுக்கு நிவாரண நிதிக்கான காசோலை மற்றும் அரசு வேலைக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதற்காக மேற்கு வங்க அரசு ஏற்பாடு செய்த நிகழ்ச்சி கொல்கத்தாவில் நடந்தது.

இதில் மேற்கு வங்க முதல்வர் மம்தா கலந்து கொண்டு நிவாரண நிதி மற்றும் அரசு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த விழாவில் அவர் பேசும் போது,' ஒடிசா ரயில் விபத்தில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 103 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 86 பேரை இதுவரை அடையாளம் காண முடிந்துள்ளது. 172 பேர் பலத்த காயங்களுடனும், 635 பேருக்கு சிறிய காயங்களும் ஏற்பட்டுள்ளது. பாலசோர் விபத்தின் பின்னணியில் உள்ள காரணத்தை மறைக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

இதை பேச விடாமல் தடுக்க மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 16 நகராட்சிகளில் சோதனை செய்ய சி.பி.ஐ.யை அனுப்பியுள்ளது. இந்த சோதனைகள் மூலம் உண்மையை உங்களால் (பா.ஜ. அரசு) மறைக்க முடியாது. உண்மை வெளி வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

விபத்தில் காயமடைந்த மற்றும் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களும் விபத்துக்கான காரணத்தை அறிய விரும்புகிறார்கள். அதன் பின்னணியில் உள்ள குற்றவாளியை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு மம்தா தெரிவித்தார்.

### பா.ஜ.க.வுக்கு எதிரான அலை!

# ஆட்சி மாற்றத்தை விரும்பும் மக்கள்!

## தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் பேச்சு!



அவுரங்காபாத், ஜூன் 10- ''மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதால், நாட்டில் பாஜ.க.வுக்கு எதிரான அலை வீசுகிறது,'' என்று தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவித்தார்.

மக்களவை தேர்தல் வரும் 2024ல் நடக்க உள்ளது. அதே போல், மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கான தேர்தல் அடுத்தாண்டு பிற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத் பவார், ''கர்நாடக தேர்தலில் பா.ஜ. தோல்வியை சந்தித்துள்ளது.

இதன் அடிப்படையில் பார்த்தால் மக்கள் மாற்றத்தை விரும்புவது தெரிகிறது. மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதால், நாட்டில் பா.ஜ.வுக்கு எதிரான அலை வீசுகிறது. இனி வரும் தேர்தல்களில் ஒரு மாற்றம் இருக்கும். இதை சொல்வதற்கு ஜோசியர் தேவையில்லை. இந்த தோல்வியை தொடர்ந்து, ஆளும் பா.ஜ. அரசு மக்களவை தேர்தலில் மட்டுமே கவனம் செலுத்தும். மக்களவை தேர்தலுடன் சட்டப்பேரவை தேர்தல்களையும் சேர்த்து நடத்தும் திட்டத்தை போட்டு குழப்பி கொள்ள வாய்ப்பில்லை,'' என்று தெரிவித்தார்.

# மதவாத எதிர்ப்பு சக்திகள் ஓரணியில் திரள வேண்டும்!

## காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா பேட்டி!



பெங்களூரு, ஜூன் 10- கர்நாடக மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா, பெங்களூருவில் உள்ள முதல்வரின் அரசு இல்லமான கிருஷ்ணாவில் முதல்வர் சித்தராமையாவை சந்தித்து பேசினார்.

அதை தொடர்ந்து முன்னாள் பிரதமர் எச்.டி.தேவகவுடாவின் வீட்டிற்கு பரூக் அப்துல்லா சென்றார்.

இந்த சந்திப்புக்கு பின் செய்தியாளர்களிடம் பரூக் அப்துல்லா கூறும்போது, மதவாத சக்திகளை ஒழிக்க வேண்டுமானால், அடுத்தாண்டு நடக்கும் மக்களவை தேர்தலில் மதவாத எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டும். மாநில கட்சிகள் மதவாத எதிர்ப்பு அணியில் இணைய வேண்டும்' என்றார்.

# அலட்சியத்தின் விளைவே கொடூர விபத்து!

## ஆனந்த விகடன் தலையங்கம்!



மூன்று ரயில்கள் மோதிக்கொண்டதில் 140 கோடி இதயங்கள் நொறுங்கி இருக்கின்றன. ஆம், ஒட்டுமொத்த தேசத்தையும் உலுக்கியிருக்கிறது ஒடிசா மாநிலத்தில் நடந்த ரயில் விபத்து. ஷாலிமாரிலிருந்து சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ், லூப் லைனில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியதில் கடுமையான சேதம் ஏற்பட்டது. அப்போது தடம்புரண்ட அதன் ரயில் பெட்டிகள்மீது, அருகில் இருந்த இன்னொரு தண்டவாளத்தில் வந்த பெங்களூர் ஹௌரா எக்ஸ்பிரஸ் மோதியது. விபத்தில் ஆயிரமாயிரம் கனவுகளோடு பயணம் செய்த 275 இன்னுயிர்கள் பலியாகிவிட்டன. மேலும் 1,175 பேர் காயம் அடைந்திருக்கிறார்கள்.

இந்திய ரயில்வே வரலாற்றிலேயே நான்காவது பெரிய ரயில் விபத்து இது. இந்த நூற்றாண்டின் மிக மோசமான ரயில் விபத்தும்கூட!

இத்தனை உயிர்களைக் குடித்த இந்தக் கோர விபத்துக்குத் தானியங்கி சிக்னலில் (இன்டர் லாக்கிங் சிஸ்டம்) ஏற்பட்ட கோளாறு காரணமா, அல்லது இதில் சதிச் செயலில் ஈடுபட்ட யாரேனும் காரணமா என்பதை ஆராயும் பொறுப்பை மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்திருக்கிறது இந்திய ரயில்வே. ரயில்வே பாதுகாப்பு கமிஷனரும் தனியாக ஒரு விசாரணை நடத்தியிருக்கிறார்.

விபத்துக்கு மையப் புள்ளியாகக் கருதப்படும் இன்டர் லாக்கிங் சிக்னல் சிஸ்டத்தில் இருக்கும் குறைபாடுகள் குறித்து கடந்த பிப்ரவரி மாதமே எச்சரிக்கை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற கோர விபத்துகள் நடக்கும்போதுதான், சம்பந்தப்பட்ட துறையின் செயல்பாடுகள் பொதுமக்களின் கவனம் பெறும். புதிதாக தண்டவாளங்களை அமைக்காமல், பாதுகாப்பு அம்சங்களில் முதலீடு செய்யாமல், காலியாக இருக்கும் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட ரயில்வே பணியிடங்களை அதிலும் குறிப்பாக பாதுகாப்போடு நேரடியாகத் தொடர்பு கொண்ட சுமார் 1.9 லட்சம் பணியிடங்களை நிரப்பாமல், புதிய ரயில்களை அறிமுகப்படுத்துவது, ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, ரயில்களின் வேகத்தை அதிகரிப்பது என்று ஒன்றிய அரசு தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

இதனால் ரயில்வே துறையின் உள்கட்டமைப்பின் மீது சமாளிக்க முடியாத அளவுக்கு அழுத்தம் விழுந்திருக்கிறது. ரயில் ஓட்டுநர்கள் மற்றும் ரயில் பாதுகாப்பு தொடர்பான பணியில் இருக்கும் ஊழியர்களைக்கூட பத்து மணி நேரத்துக்கும் மேலாக வேலை செய்ய நிர்பந்திப்பது ஆகியவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சரக்கு வண்டியில் மனிதாபிமானம் இன்றி ஏற்றப்பட்ட சடலங்களைப் பார்த்தாவது அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

13 லட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்யும் இந்திய ரயில்வே துறைதான் உலகிலேயே அதிக தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனம். நாடு முழுக்க 1,14,907 கி.மீ நீளத்துக்குப் பரவிக் கிடக்கும் தண்டவாளங்களில் தினந்தோறும் சுமார் 13,000 ரயில்கள் இயக்கப்படுகின்றன. தினந்தோறும் பல லட்சம் பேர் பயணிக்கிறார்கள்.

இந்திய ரயில்வேக்கு இதுபோன்று ஆயிரம் பெருமைகள் இருந்தாலும்... இவை அனைத்துமே இப்போது நடந்த விபத்தில் உயிரிழந்த ஒரே ஒரு உயிருக்குக்கூட ஈடாகாது.

**நன்றி : ஆனந்த விகடன்**
14.6.2023


## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. (திருப்பூர் மண்டலம்) மத்திய சங்க நிர்வாகிகள்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. (திருப்பூர் மண்டலம்) பதிவு எண். 1474/CBE, பேரவை இணைப்பு எண். 1091) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 27.05.2023 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் திரு. சி.கருணாநிதி அவர்களையும், துணை ஆணையாளராக திரு. எஸ்.கார்த்தசுரேஷ் அவர்களையும் ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | ப.சென்னியப்பன் |
| பொதுச்செயலாளர் | – | கே.கே.துரைசாமி |
| இணைப்பொதுச்செயலாளர் | – | G. மணி |
| அமைப்புச் செயலாளர் | – | N. குப்புசாமி |
| பிரச்சார செயலாளர் | – | S. ராதாகிருஷ்ணன் |
| தலைமை நிலையச் செயலாளர் | – | P. காளிமுத்து |
| துணைச்செயலாளர் | – | A. ஆறுமுகம் |
| பொருளாளர் | – | சு.சின்னக்கண்ணன் |

இடம்: கலைஞரகம்
நாள்: 07.06.2023

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை


## நல்ல பணிகள் ஆற்றிட....



**சுடு நெருப்பில்**
**புடம் போடத்தான்**
**நல்ல தங்கம் கிடைக்கும்.**
**அதுபோல் பொது வாழ்க்கையில்**
**இடையூறுகளுக்கு**
**ஈடு கொடுத்தால் தான்**
**தனது நாட்டிற்கும்**
**தாய் மொழிக்கும்**
**நல்ல பணிகள்**
**ஆற்றிட முடியும்.**

**.... கலைஞர் .....**


## பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 2 (மணலி)

ம.அ.2.ந.க.எண்.இ1/2258/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மண்டல அலுவலர் - 2 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஒரு உறை முறையில் கோரப்படுகிறது.

**நமக்கு நாமே திட்டம்** - ம.அ.2.ந.க.எண்.இ1/2258/2023 மண்டலம்-2, பகுதி-5, கோட்டம்-19, எம்.எம்.டி.ஏ 59வது தெருவில் உள்ள துவக்கப் பள்ளி கட்டிடத்தில் 3 வகுப்பறைகள் கட்டுமானம், கழிப்பறை மற்றும் படிக்கட்டு கட்டும் பணி மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** மற்றும் **www.chennaicorporation.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்துகொள்ளவும்

| பணியின் மதிப்பு தோராயமாக | முன் வைப்புத் தொகை |
|---|---|
| ரூ.75,22,171.41 | ரூ.75500/- |

ஒப்ப நாள் மற்றும் நேரம் : **22.06.2023** அன்று பிற்பகல் **3.00** மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் : **23.06.2023** அன்று பிற்பகல் **3.30** மணி

செ.ம.தொ.இ / 2930 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மண்டல அலுவலர் - 2**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

**ஜூன் 10 (2019)**



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். 1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் “அண்ணா விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

“புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் நுட்ப மையம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்றார்!

திண்டிவனம், ஜூன் 10 விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த மொளசூர் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் ‘தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையுடன் டாடா டெக்னாலஜி நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட்டதை சென்னை ஓரகடத்தில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதையடுத்து திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி வைத்தார்.

அப்போது பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு அழைப்புவிடுத்துள்ளார்.

மக்கள் நலனை அக்கறை கொண்டு இரண்டு ஆண்டு காலத்தில் அனைத்துத் துறைகளிலும் பல்வேறு சாதனைகளை படைத்து மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்களை தீட்டி உரிய காலத்தில் திட்டங்கள் மக்களுக்கு சென்று சேரும் நோக்கத்தோடு நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருப்பதாகவும்

மேலும் மேல்நிலைக் கல்வி படிப்பு முடித்த மாணவ - மாணவிகள் தனியாக தொழில் கற்றுக் கொண்டு அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திகொள்வதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் டாடா டெக்னாலஜி நிறுவனத்துடன் இணைந்து 34.65கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 22 இடங்களில் தொழில் 4.0தொழில்நுட்ப மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, திண்டிவனம் சார ஆட்சியர் கட்டாரவி தேஜா, மரக்காணம் ஒன்றிய சேர்மன் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்டக் குழு துணை தலைவர் சீலா தேவி சேரன் பயிற்சி கல்லூரி முதல்வர் பிரேம் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. பொற்கோ

**ஜூன் 10 (2014)**



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் ‘சமுதாயச் செம்மல்’ என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். ‘தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு’, ‘தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு’ ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

“த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**